**செய்தி வெளியீடு எண்: 053** **நாள்: 21.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம் (TANSA), தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் (TNGOU), தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் மாநில மையச் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் ( சி மற்றும் டி பிரிவு) ஆகிய அரசின் அங்கீகாரம் பெற்ற பிரதான அரசுப் பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், இன்று **(21.1.2019)** தலைமைச் செயலாளர் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர். அப்போது, அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ–ஜியோ (JACTTO-GEO), வரும் **22.1.2019** முதல் நடத்த உத்தேசித்துள்ள காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் தங்கள் சங்கங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும், எவ்வித வேலைநிறுத்த போராட்டத்திலும் ஈடுபடாமல் மக்கள் பணியை தொடர்ந்து ஆற்றவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அனைவரையும் சமீபத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரசுக்கு உறுதுணையாக இருப்போம் என்றும் அவர்கள் உறுதியளித்தனர்.

அத்துடன் அரசு ஊழியர்களின் நலனுக்காக பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவினை அளித்தார்கள். அக்கோரிக்கைகள் உரிய கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**